**செய்தி வெளியீடு எண் : 055** **நாள் : 09.01.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகத் தமிழ் முதலீட்டாளர்களையும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் Global Tamil Angels இணையதளம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (9.1.2023) சென்னையில், வட அமெரிக்க தமிழ் சங்கப் பேரவை மற்றும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் இணைந்து நடத்திய உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகத் தமிழ் முதலீட்டாளர்களையும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள Global Tamil Angels (www.tamilangels.fund) இணையதளத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் ஒருங்கிணைப்புடன், முதலீடுகளை எதிர்நோக்கும் புத்தொழில் நிறுவனங்களையும், முதலீட்டு சக்தி வாய்ந்த தனிமனிதர்களையும் இணைக்கும் தளமாகவும், முதலீடு செய்பவர்களுக்கு சட்ட ரீதியான வழிகாட்டல்களை வழங்கும் ஆலோசகர்கள், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளை உலகச் சந்தைக்கு எடுத்து செல்ல உதவும் வழிகாட்டிகள் ஆகியோரை இணைக்கும் தளமாகவும், உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர் தளம் விளங்கும்.

முதலீட்டாளர்கள் தங்கள் சுய விவரங்களை இணையத்தில் பதிவு செய்வதன் மூலம் மின்சார வாகனம், சுகாதார மேம்பாடு, மென்பொருள் தயாரிப்பு, வேளாண் மற்றும் உணவு தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களைச் சிரமமின்றி தொடர்பு கொள்ளலாம். புத்தொழில் நிறுவனங்களின் இலக்கு, வருவாய் மாதிரி ஆகியவற்றை தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க நிறுவனம் (StartupTN) அந்நிறுவனங்களின் சுயவிவரங்களை சரிபார்த்த பின்னர் இணையத்தில் வெளியிடப்படும். இதன்மூலம், முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய விரும்பும் துறைகளின் அடிப்படையில், புத்தொழில் நிறுவனங்கள் முதலீட்டாளர்களை ஆராய்ந்து அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாட்டை சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய, அமெரிக்க வாழ் தமிழக முதலீட்டாளர்கள், வரும் டிசம்பர் 2023 - க்குள் அமெரிக்க தமிழ் நிதியம் (ATF) 16.50 கோடி ரூபாய் (சுமார் $2.00 மில்லியன்) முதலீடுகளை வழங்குவதற்கான விருப்ப கடிதத்தினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர

தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்களிடம் அளித்தனர்.

அமெரிக்க தமிழ் நிதியத்தின் நிர்வாகக் குழு, மென்பொருள் துறையில், குறிப்பாக மென்பொருள் சேவை (Software As A Service), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரங்கள் குறித்த கற்றல் (Machine Learning) மற்றும் உயர் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு.த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர். இளங்கோ, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சிவராஜா ராமநாதன், வட அமெரிக்க தமிழ் சங்க பேரவையின் தலைவர் திரு.பாலா சுவாமிநாதன், வடஅமெரிக்க தமிழ் சங்க பேரவையின் தொழில் முனைவோர் அமைப்பின் தலைவர் திரு. கணபதி முருகேசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in